# துதிகள்

## குரு பிரம்மா

குரு பிரம்மா குரு விஸ்ணு
குரு தேவா மஹேஸ்வர
குரு ஸாக்ஷாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நம

## விநாயகர்

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சுசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன் வதனம்
த்யாயேத் ஸர்வ விக்னேபசாந்தயே

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேன்

## விநாயகர் துதி:

கைத்தல நிறைகனி யப்பமோ டவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்

மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தளவயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

மத்தமிழடை வினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய முதல் வோனே
குப்புர மெரிசெய்த அச்சிவனுரை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா

அத்துயரது கொடு சுப்ரமணிபடு
அப்புன மதனிடை யிபமாகி
அச்சிறு முருகனை அக்குற மகளுடன்
அக்கண மண மருள் பெருமாளே

**குரு வணக்கம்:**

ஐந்து வித்துவ வித்தகராம்
ஐயனருள் உணர்ந்தவராம்
வழி முறைகள் தெரிந்தவராம்
வாழ்த்தியருள் புரிபவராம்
அன்பருக்கு அன்பருமாய்
அருளுணர்வில் ஈசுவரனாய்
குற்றம் பொறுப்பவராய்
குணமேரி நின்றவராய்
அன்பின் தன் உருவமதாய்
இறையவரைத் தேடிடவே
இனியதொரு சற்குருவாய்
குருவாய் வந்தவரை சரணடைவோம்
சரணடைவோம்
வழிகாட்ட வந்தவரை வணங்கிடுவோம்
வணங்கிடுவோம்
சற்குரு நாதரே சரணம் ஐயப்பா

**சிவ வணக்கம்**

பாடற்கினிய வாக்களிக்கும் பாடலும் சோறும்
பரிந்தளிக்கும் தேடற்கினிய அடியவர்தம்
தேட்டமளிக்கும் திறமளிக்கும் ஆடற்கினிய
நெஞ்சே என்மேல் ஆணை கண்டாய்
தேடற்கரிய சீரளிக்கும் சிவாய நம

**சிவ ஸ்தோத்திரம்**

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திரம் புஷ்டி
வர்தனம் உர்வாருகமிவ பந்தனாத் ம்ருத்யோர்
முட்சீய மாமிருதாத்

## ஸ்ரீ விஷ்ணு துதி

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம் நலந்தரஞ் செய்யும்
நீள்வீசும் பருளும் அருளோடு பெருநில
மளிக்கும் வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினு மாயின செய்யும் நலந்தருஞ்
சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா எனும்நாமம்

## கண்ணன் துதி

கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா, வண்ணந் தருமே
தகுமே நிதியும், பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமானிங்கே

## ஆஞ்சனேயர் துதி

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே
ஒன்றைத் தாவி, அஞ்சிலே ஒன்று ஆறு
ஆக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று
பெற்ற அணங்கு கண்டு அயலார் ஊரில்,
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் நம்மை
அளித்துக் காப்பான்

## இலக்குமி துதி (லெட்சுமி)

திருவுடைப் பங்கயத்தில் திகழ்ந்திடும்
மகளே போற்றி, திருவுடைத் திருமால்
கொண்ட திருவான செல்வி போற்றி,
திருவொடு யாவும் தந்து தினம் தினம்
என்னுள் நிற்பாய், மருவிடும் பூவாழ் வல்லி
மலர்ப் பதம் போற்றி போற்றி

திருமாலின் மார்பகத்தில் திகழ்பவளும் நீயே
சந்தனப்பூ மேனியளே, சங்குமலர்க் கலையே
தாயாரே நீயின்றித் தாயாரே தெமக்கு,
வந்தவடைவார் யாவர்க்கும் வரமருளும்
முன்னே, வடவேங்கடத்தவனை மணமுடித்த
பொன்னே.

## அம்பிகை துதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம்
உணர்வுடையோர், மதிக்கின்ற மாணிக்கம்
மாதுளம் போது மலர்க்கமலை, துதிக்கின்ற
மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன,
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன்
விழுத்துணையே, விழிக்கே
அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்
சொன்ன, வழிக்கே வழிபட நெஞ்சுண்டு
எமக்கவ்வழி கிடக்கப் பழிக்கே சுழன்று
வெம் பாவங்களே செய்து
பாழ்நரகக், குழிக்கே
அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டனியே

## ஓம் சக்தி துதி

நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி,
நலத்தை நமக்கிழைப்பாள், அல்லது நீங்கும்
என்றேயுல கேழும், அறைந்திடு வாய்முரசே
சொல்லத் தகுந்த பொருளன்று காண்
இங்குச், சொல்லு மவர் தமையே, அல்லல்
கெடுத்தம ரர்க்கிணை யாக்கிடும்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்

## கலைமகள் (சரஸ்வதி)

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாவள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்,
கொள்ளை யின்பம் குலவு கவிதை, கூறு
பாவலர் உள்ளத் திருப்பாள், உள்ளதாம்
பொருள் தேடி யுணர்ந்தே, ஓதும் வேதத்தின்
உள்நின் றொளிர்வாள், கள்ளமற்ற முனிவர்கள்
கூறும், கருணை வாசகத் துட்பொருளாவாள்.

## ஸ்ரீ முருகன் துதி

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ,
சிந்நாகுல மானவை தீர்த்து எனையாள்,
கந்தா, கதிர்வேலனே, உமையாள்
மைந்தா, குமரா மறை நாயகனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கரவாய் உயிராய்க் கதிராய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

## ஐயப்பன் துதி

ஆனைமுகத்தோன் தம்பி அருள் குமரனுக்
கிளையோன் வானவர் போற்றும் வாணி
வந்தெனக்கு அருளவேணும் சேனையில்
தலைவர் போற்றும் தென்குளத்தூரிலையம்
கானக விளையாட்டெல்லாம் கருத்துடன்
போற்றும் நெஞ்சே.

சாஸ்தா நமக்குண்டு தாய்பால் வருவார்
இந்தத்தனி வழிக்கே

பார்த்தால் நமக்கு பயமேதுமில்லை பயந்து
பயந்து ஆற்றாமல் சொல்லி அபமிட்டோடி
வரும் சுரர்தமை காத்தே வரும் கடிய
குன்றேறிய காவலனே

செழும் தன்டமிழ் இன்பமு துண்டவனே
மணிகெண்டனெனும் பெயர் கொண்டவனே
உயர் அண்டர் தினம் தொழும் ஆண்டவனே
பொன் அம்பல மேவிய தாண்டவனே
ஸ்வாமியே சரணம் ஐயப்பா